புதுமலர்: 10 கார்த்திகை - மார்கழி இதழ்: 06

# அனல்

இணை ஆசிரியர்கள்

யோ.நிக்ஷன்
வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.11.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - உதவிக்கரத்தை நீட்டுவோமா?
- வாலிபர் வளாகம் - விழுகையின் அடையாளங்கள் (தொடர்ச்சி)
- எனக்கு இரங்கும்
- பெண்கள் பக்கம் - யார் இந்த சப்பீராள்?
- பக்தர்களின் பயிலகம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 58
- உண்மைக்கு பரிசு
- அருட்பணியாளர் சரிதை - கிரஹறாம் ஸ்டெயின்ஸ், அடா லீ
- வினா விடை - 60
- அனலின் ஆன்மீக விருந்து - பாவத்தையும் துக்கங்களையும் உலகத்தையும் மேற்கொள்ள தேவ ஆவியானவருடைய அபிஷேகம் வேண்டும்.


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்



பாடுகளின் மூலமாக எம்மை தம்முடன் ஒப்புரவாக்கும் படியாக தம்முடைய மகிமையை எல்லாம் விட்டு இப்பூமிக்கு வந்த ஆண்டவர் இயேசுவின் ஒப்பற்ற தியாக ஒப்புக்கொடுத்தலால் ஒவ்வொரு மனிதனுக்குமான மீட்பு உண்டு பண்ணப்பட்டிருக்குறது. எந்த மனிதனுடைய வாழ்விலும் அது வீணாய்ப் போகக் கூடாது என்பதுதான் ஆண்டவரின் ஏக்கம் எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் எனபதே தேவனுடைய சித்தம்.

நீர் பாவமன்னிப்பையும் பாவத்தில் இருந்து ஜெயம் பெற்ற வாழ்வும் வாழ்வதற்கு உரிய அனைத்தையும் இயேசு செய்து முடித்து விட்டார். விசுவாசத்துடன் அதை உங்களுக்குரியதாய் எடுத்துக்கொள்ளுங்கள் இயேசுவை உங்கள் இராட்சகராய் ஏற்றுக்கொள்ளுங்கள்.

மாதங்களும் ஆண்டுகளும் வேகமாய் ஓடுகின்றது. இப் பூமியில் உமக்கு கிடைத்த வாழ்வின் சந்தர்ப்பத்தை அர்த்தமுள்ளதாக்குங்கள். 2013ம் ஆண்டில் இக்கடைசிச் சஞ்சிகை மூலமாக உங்களைச் சந்திப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. புதிய ஆண்டுக்குள் கடந்து செல்லும் போது கிறிஸ்துவுக்குள்ளான ஓர் புதிய வாழ்வை பெற்றுகொள்ளுங்கள். பாவத்தையும் பாவம் தரும் சந்தோசத்தையும் வெறுத்து விடுங்கள். புதிய சிருஷ்டியாக கிறிஸ்துவுக்குள் வாழ உங்களை ஒப்புக்கொடுங்கள். இவ் ஆண்டு முழுவதும் கர்த்தர் செய்த சகல காரியங்யளுக்காகவும் அவருக்கே முழு மகிமையும் உண்டாவதாக.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதவிக்கரத்தை நீட்டுவோமா?

றிஸ்வான் இரவு படுக்கையில் தூக்கம் வராமல் புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். அந்த இரவின் அமைதியை இன்னும் கெடுக்கும் படியாய் எங்கோ தூரத்தில் நாய்களின் ஊளைச் சத்தம் பயங்கரமாய் தொனித்தது. புரண்டு புரண்டு படுத்தவன் தூக்கம் வராமையால் எழுந்து வீட்டு வாசல் திண்ணையில் அமர்ந்து கொண்டான். அப்போது இருந்த நிலவு வெளிச்சத்தை மேகக்கூட்டங்கள் வந்து மறைத்து மறைத்து சென்றது. இதனால் இருளும், நிலவு வெளிச்சமும் மாறி மாறி வந்தது. எனவே தொடர்ந்து அதில் இருக்கப் பிடிக்காதவனாய் மறுபடியும் வந்து தன் படுக்கையில் விழுந்தான்.

இப்போது அவனது கடந்த கால நினைவுகள் அவன் கண்முன் வந்து நின்றன; ஆம்! அப்பா, அம்மா, தங்கை என அழகிய குடும்பம் அவனுக்கு இருந்தது. அப்பா விவசாயம் செய்தார், அம்மா வீட்டிலே மாடு, கோழிகள் என்பவற்றை வளர்த்தாள். இதனால் குடும்பத்திற்கு போதிய வருமானம் கிடைத்து. இவர்களது படிப்பும் நன்றாக சென்று கொண்டிருந்தது. பாடசாலை முடிந்து வீடு வந்ததும் மாலை நேரங்களில் வீட்டு முற்றத்தில் இவனும் தங்கையும் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்களும், செல்லச் சண்டைகளும் வீட்டை இன்னும் கலகலப்பாக்கின. அத்துடன் மாலை நேரங்களில் அம்மா சுடச்சுட காய்ச்சி தரும் பசும்பாலின் சுவை மறுபடியும் குடிக்கத் தோன்றும். இப்படி மிகவும் மகிழ்ச்சியாக குடும்பம் சென்று கொண்டிருந்தது.

ஆனால் எதிர்பாராத விதமாக அப்பா கடும் சுகவீனமாகி நிரந்தர படுக்கை நோயாளியானார். வீட்டின் கலகலப்புக்கள் அனைத்தும் இல்லாமல் வீடு எப்போதும் நிசப்தமாக மாறியது. அப்பாவின் வைத்திய செலவுகளிற்காக இருந்த வயல் காணிகளும் விற்பனை செய்யப்பட்டுவிட்டது; ஆனால் அப்பாவுக்கு சுகம் தான் வரவில்லை. இப்போது அம்மாவுக்கு அப்பாவை தினமும் வைத்தியசாலை கொண்டு செல்வதும் மறுபடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுவருவதுமே நாளாந்த கடமையாகிவிட்டது. அம்மாவின் முகத்திலும் தங்கையின் முகத்திலும் சிரிப்பை கண்டு மாதக்கணக்காகியது. குடும்ப பாரத்தை சுமக்க வேண்டிய பெரும் பாரம் அம்மாவின் தலைமேல் விழுந்தது. இதனால் அம்மா தன்னால் இயன்ற முயற்சிகளை செய்து பார்த்தாள். எதுவும் வாய்க்கவில்லை. ஆகவே அம்மா தனது உறவினர்கள், தெரிந்தவர்களிடம் எல்லாம் உதவி கேட்க சென்றாள். ஆனால் எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

இப்போது தான் அம்மாவுக்கு மாமாவின் நினைவு வந்தது. மாமாவின் வீடு பக்கத்து தெருவில் தான் இருக்கின்றது. மாமாவின் குடும்பம் மிகவும் நன்றாக வாழ்கின்றார்கள். மாமாவின் இரண்டு மகன்கள் ஐரோப்பிய நாடொன்றில் வேலை பார்க்கின்றார்கள். மாமா தனது பாவனைக்கென்றே இரண்டு மோட்டார் சைக்கிள்களை வைத்திருக்கின்றார். மாமியும் தனக்கென ஒரு மோட்டார் சைக்கிளை கடந்த வாரம் தான் வாங்கியிருக்கிறார். அத்துடன் இப்போது இருக்கும் பெரிய வீட்டுக்கு மேலதிகமாக இன்னொரு வீடு வாங்குவதற்காக மாமா முயற்சி செய்து கொண்டிருக்கிறார். எனவே இதனையெல்லாம் பார்த்த அம்மா எப்படியாவது மாமாவிடம் சிறு உதவியைப் பெற்று தனக்கு தெரிந்த தையல் வேலை செய்யலாம் என மனதிற்குள்ளே எண்ணினாள். அதனை செயற்படுத்தும் நோக்கோடு மாமாவின் வீட்டிற்கு சென்று தனது நிலையை எடுத்துக் கூறினாள்.

ஆனால் முன்பு நன்றாக ஒட்டி உறவாடிய மாமா வேறு ஒருவரைப் பார்ப்பது போல அம்மாவைப் பார்த்தார். அத்துடன் அம்மா கூறுவதை வேண்டா வெறுப்பாகவே கேட்டார். மாமி சொன்னார்: இப்போது நாங்கள் மிகுந்த கஷ்டத்தில் இருக்கின்றோம். மகன்மார் வெளிநாட்டில் வேலை இல்லாமல் சாப்பிட்டிற்கே கஷ்டப்படுகின்றார்கள். மாமாவும் ஆமோதிப்பது போல் தலையை ஆட்டி கையை விரித்தார். பாவம்! அம்மாவும் ஏமாற்றத்தோடு அங்கிருந்து நகர்ந்து வேறு எங்கே உதவி கேட்கலாம் என்ற எண்ணத்தோடு சேலைத்தலைப்பால் முகத்தை துடைத்தபடி வெளியேறினாள். அம்மா வீட்டைவிட்டு வெளியேறவும் மாமா தனது புதிய மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்து தான் புதிதாக வாங்கவிருக்கும் வீட்டுக்கான முற்பணத்தை எடுத்துச் சென்றார்.

***ஆம் பிரியமான நண்பர்களே! இப்படி எத்தனை சம்பவங்களை எமது நாளாந்த வாழ்க்கையில் காண்கின்றோம். எத்தனையோ பேர் எத்தனையோ தேவைகளோடு எம்மை சூழ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வருஷத்தின் கடைசிப்பகுதியில் வந்திருக்கும் நாம் இதுவரைக்கும் உதவி செய்யாமல் பராமுகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா என்பதனை சிந்தித்துப்பார்ப்போம்.***

**நீதிமொழிகள் 3:27 நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.**

வை.விமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 02. சரியான இடம் ஆனாலும் தவறான நேரம் (எருசலேமும், தாவீதும், பத்சேபாளும்)

ஒருவன் தேவனையும், தேவ வார்த்தையையும், பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலையும் விட்டு விலகிச் செல்லும் போது எவ்வளவு தூரம் வீழ்ச்சியடைகிறான், எவ்வளவு துன்பங்களுக்குள்ளாகிறான். சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கும்படி தேவன் அவனை அழைத்த போது (தெரிந்து கொண்ட போது) தேவனின் இருதயத்திற்கு பிரியமானவனாயிருந்தான். **(1சாமுவேல் 13:14, அப்போஸ்தலர் 13:22) ஆனால் ராஜ்யபாரம் நிலைவரப்படும் படியாக தேவன் அவனுக்கு கிருபை அளித்து பல வெற்றிகளைக் கண்ட பின் ஒரு கட்டத்தில் முன்னர் செய்வது போல படையை யுத்தத்திற்கு நடத்திச் செல்லாமல், எருசலேமில் தங்கிவிட்டான்.** அவனுடைய மனதில் ஓர் மெல்லிய (யாரும் கண்டு கொள்ள முடியாத) தளர்ச்சி/வீழ்ச்சி ஏற்பட்டது. வெகு சீக்கிரத்தில் அவனுடைய முழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையையும்விசேஷமாக ஆவிக்குரிய வாழ்க்கையிலும் ஒழுக்க நெறியிலும் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

புகழ், ஆடம்பரம், சுகபோகம் அனைத்தும் அவனுக்கு கிட்டிய போது தேவனையும் அவரின் கிருபையையும் சார்ந்து வாழ்வதற்கு மாறாக தன்னம்பிக் கையையும் தன் உணர்ச்சிகளையும் சார்ந்து வாழவும் திருப்திப்படுத்தவும் கால் வைத்துவிட்டான்.



அரண்மனை அவனுக்குரிய இடம். தேவனே அதை அவனுடைய வாழ்வில் அனுமதித்தும் ஏற்படுத்தியும் கொடுத்தார். **ஆனால் ராஜாக்கள் கூட யுத்தத்திற்கு போக வேண்டிய அவசரமும் அவசியமு மான நேரத்தில் தாவீதோ அதை பொருட்படுத்தாதவ னாகவும், வெற்றியை நிச்சயம் தன்னுடையவர்கள் பெற்றுக் கொள்வார்கள் என்ற எண்ணத்துடனும் நிர்விசாரமாக தவறான நேரத்தில் எருசலேமில் இருந்துவிட்டதினால் விபச்சாரக்காரனாகவும், கொலைகாரனாகவும் மாறிவிட்டான்.**

உன்னுடைய வாழ்வில்எப்படி? உனக்கு முழு உரிமையும் உண்டா யிருந்தாலும் நீ நிற்ப தற்கு, கதைப்பதற்கு, தங்குவதற்கு, யாரும் உன்னை அழுத்தத்திற்கு உள்ளாக்கி இதை செய், அதை செய்யாதே என்று சொல்ல வேண்டிய அளவுக்கு நீ இல்லாமல் வளர்ந்த நிலையில் அனைத்தையும் செய்யக் கூடிய ஆற்றல் படைத்த வனாக(ளாக) இருந்தா லும் அது எப்பேற்பட்ட நேரம் என்று மறுபடி யும்மறுபடியும்பரிசீலனை செய்துபார். தப்புவிக்கப் படுவாய்!. *(பாடசாலை, தொழிலிடங்கள், உறவினர் வீடு, நண்பர்களின் கூடுகை, காரியாலயம், ஆலயங்கள், விளையாட்டு மைதானம், பூங்கா, ஐஸ்கிறீம் கடை).*

## 03. தூரத்தில் பின் செல்வது (பற்றுவது)

பிரதான ஆசாரி யரும், வேதபாரகரும், மூப்பரும் ஆட்களை அனுப்பி கெத்சமனே தோட்டத்திலே இயேசு வைக் கைது செய்துவிட் டார்கள். கைது செய்யப் பட்ட இயேசுவை பிர தான ஆசாரியனாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்பாவினிடத்திற்கு கொண்டு போனார்கள். **மத்தேயு 26:58இல் பேதுரு தூரத்திலே அவருக்குப் பின்சென்று.....**

**தூரத்திலே பின் செல்லும் சீஷத்துவம் சீக்கிரத்திலே வீட்சிக்கு வழிவகுத்துவிடும். உலகத்திற்கு ஒருகை; இயேசுவுக்கு ஒரு கை என்று இரட்டை வாழ்வு செய்யும் போது முழுமன தோடு அவருக்கு ஒப்புக் கொடுக்காமல் இருக்கும் போது வீழ்ச்சிக்கு வழி வகுத்து விடுகின்றோம்.**

> **தூரத்திலே பின் செல்லும் சீஷத்துவம் சிக்கிரத்திலே வீட்சிக்கு வழிவகுத்துவிடும். உலகத்திற்கு ஒருகை; இயேசுவுக்கு ஒரு கை என்று இரட்டை வாழ்வு செய்யும் போது முழுமனதோடு அவருக்கு ஒப்புக் கொடுக்காமல் இருக்கும் போது வீழ்ச்சிக்கு வழிவகுத்து விடுகின்றோம்.**

என் நண்பனே! உன் வாழ்க்கையில் இது உண்மையா? வேலை செய்யும் இடத்திலே, உன் நண்பர்களோடு நீ இருக்கும் போது இயேசுவுக்காய் துணிந்து நிற்கத் தவறிவிட்டாய். ஆகையினால் தான் உன் வாழ்க்கையிலே வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது. அவரை அறிக்கையிருந்து அவரோடு நெருங்கி வாழ்ந்திருப்பாயானால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டு இருக்காது. இயேசுவுக்கு அருகிலிருக்கும் எந்த மனிதனையும் தொடுவதற்கு சாத்தான் தயங்குவான். ஆனால் தூரத்தில் பின் செல்லுபவனை எளிதிலே அவன் விழப்பண்ணிவிடுவான்.

## 04. தவறான உறவு

பேதுரு ஆண்டவரின் எதிரிகளோடு கூடப்போய் உட்கார்ந்து கொண்டான். இதை அனைதது சுவிசேஷங்களிலும் நாம் பார்க்கலாம். இயேசுவின் சீஷன் இயேசுவின்எதிரிகளின்நடுவிலே இருக்க முடியுமா? **ஆண்டவர் நம்மை தம்மோடு உறவு கொள்ளும்படியாய் அழைத்திருக்கிறார். ஆனால் நாம் உலக மக்களோடும், அவரைப் பகைக்கின்றவர்களோடும், அவருக்கு எதிராக முரட்டாட்டம் பண்ணுகிறவர்களோடும் உறவு வைத்துக் கொண்டால் நம் வாழ்க்கையிலே நாம் ஆண்டவரை மறுதலிக்க நேரிடும்.** அநேக வாலிபர்களும் தேவ பிள்ளைகளும் உலக மக்களோடு மிக நெருங்கிய உறவு வைத்துக் கொள்கிறார்கள்.

**உலக மக்களை வெறுக்க வேண்டும் என்று வேதம் கூற வில்லை. ஆனால் ஒளிக்கும் இருளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று தெளிவாக வேதம் கூறுகின்றது 11கொரிந் தியர் 6:14.** ஒளியின் மகனான நீ இருளின் மகளான ஒரு பெண்ணை விரும்பி திருமணம் செய்யலாமா? ஒளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளான நீ இருளின் மகனான ஒரு மனிதனோடு தொடர்பு வைத்துக் கொள்ளலாமா? இவ்விதமான நட்பு உன்னை வீழ்ச்சிக்கு நேராக இழுத்து விடக்கூடும். யாரோடு கூட உன்னுடைய நாட்களையும் நேரத்தையும் செலவழிக்கிறாய் என்பது முக்கியம்.

## 05. சோம்பல், வீண் அலுவல், தகாத பேச்சு

**11தெசலோனிக்கேயர் 3:11** இதன் ஒரு தமிழ் மொழிபெயர்ப்பு வேதாகமம் இவ்வாறு கூறுகின்றது. **உங்களில் சிலர் சோம்பேறிகளாய் இருக்கிறார்கள் என்று நாங்கள் கேள்விப்படுகின்றோம். அவர்கள் எவ்வித வேலையும் செய்யாமல் வீண் அலுவல்களில் ஈடுபடுகிறார்கள்.** மாத்திரமல்ல, **1தீமோத்தேயு 5:13** சோம்பல் தனமுள்ளவர்களாகி வீட்டுக்கு வீடு போகப்பழகிக் கொள்வார்கள். சோம்பேறிகளாக மட்டுமல்ல, ஊர் வம்பளக்கிறவர்களாகவும், தேவையற்ற காரியங்களில் தலையிடுகிறவர்களாகவும் இருந்து வீணான காரியங்களைப் பேசித் திரிவார்கள்.

**கடந்து செல்லும் வாலிபம் ஒரு போதும் திரும்பிவிடுவதில்லை**

**நீ நிமிர்ந்து நின்று இயேசுவுக்கு சாட்சியாய் வாழ வேண்டிய காலமிது**

**வாழ்க்கையின் அடையாளங்கள் உன் வாழ்வை எச்சரிக்கட்டும்**

**எழும்பி வா சத்திய பரர் இயேசுவிடம்!.**

**பிதாவே, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க கிருபை தாரும், வைராக்கியம் கொண்டு உமக்காக பராக்கிரமசாலியாக மாற அக்கினியை ஊற்றும். ஆமென்!.**

*முற்றும்.*

**போதகர் வேதநாயகம் சுமணன்.**

## வினா விடை - 59

### சரியான விடை எழுதியவர்கள்

*01. மே.குளோறா - நாவற்குழி*
*02. த.முகுந்தராசா - நாவற்குழி*
*03. மு.சுபாசினி - நாவற்குழி*
*04. லோ.வதனி - காரைநகர்*
*05. பா.டிலானி - காரைநகர்*
*06. ரி.சிவாஜினி - காரைநகர்*
*07. பா.மோகனதாஸ் - காரைநகர்*
*08. ம.டயானி - பாண்டவெட்டை*
*09. கே.சயிதா - காரைநகர்*
*10. பா.கோமதி - காரைநகர்*
*11. பா.தர்சினி - காரைநகர்*
*12. அ.துர்க்கா - காரைநகர்*
*13. கருணாகரன் சுபாசினி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பர்த்திமேயு என்கிற ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்கொண்டிருந்தான்...**

இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன்; **இயேசுவே! தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான். அவன் கூப்பிட ஆரம்பித்த நேரத்திலிருந்து பலவிதமான தடைகளும், அழுத்தங்களும் அவனை நெருக்கிற்று.** அவன் பேசாதிருக்கும்படி **அநேகர்** அவனை அதட்டினார்கள். வியாதிகளை தணமாக்குகிறார், சப்பாணிகளை எழுந்து நடக்கப்பண்ணுகிறார், மரித்தோரை உயிரோடே எழுப்புகிறார் என்று இயேசுவைக் குறித்து கேள்வி



அறிவு மாத்திரம் அவனிடத்தில் இருந்தது. அதை அவன் தன்னுடைய வாழ்வில் அனுபவிக்க துடிக்கிறான். ஒரு நாள் கேள்விப்படுகிறான், நான் பிச்சையெடுத்துக் கொண்டு இருக்கும் இந்த வழியாக இயேசு வருகிறார் என்பதாக. **முன்னிலும் அதிகமாய் அவன் இயேசுவை கூப்பிட்ட போது; இரக்கத்திற்காக, இயேசு அவனை அழைத்து பார்வை கொடுத்தார்.**

உன்னுடைய வாழ்விலும் இரட்சகரை தேட தேட பலவிதமான காரியங்கள் தேட முடியாதபடி தடைக்கற்களாக உன் முன் எழும்பினாலும் அவற்றையும் தாண்டி நேச ரட்சகரை தேடிப்பார். **அவர் உன்னிடமாய் சாய்ந்து உன் வேண்டுதல் கேட்பார்...**

**அவன் பார்வையடைந்து இயேசுவுக்குப் பின் சென்றான் - மாற்கு 10:52**

**தேவன் மனிதனுக்கு காண்பிப்பதே மெய்யான இரக்கம். இரக்கம் தேவனின் வல்லமையை மனித வாழ்வில் வெளிப்படுத்தும்.**

**ரேமா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பெண்கள் பக்கம்**

சப்பீராள் என்றால்; அழகி!. இவளுடைய கணவனின் பெயர்: அனனியா. **அப்போஸ்தலர் 5:1-2 (1.) அனனியா என்னும்பெயருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். 2. தன்மனைவி அறிய அவன்கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.** இவர்கள் தங்கள் காணியாட்சியை விற்றார்கள், தன் மனைவி சப்பீராள் அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கை அப்போஸ்தருடைய பாதத்திலே வைத்தான்.

ஏன் தங்களுடைய காணியாட்சியை விற்றார்கள்? **அந் நாட்களிலே வாழ்ந்த விசுவாசிகளாகிய கூட்டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.** நிலங்களையும், வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள்.

அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவருக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. **அப்போஸ்தலர் 4:31 அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.** இப்படிப்பட்ட கூட்டத்தில் தான் கலந்து கொண்டார்கள் இந்த அனனியாவும் சப்பீராளும். எல்லோரும் செய்வது போன்று இந்த கணவனும் மனைவியும் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்டார்கள். ஆனால் வஞ்சகமாய், தந்திரமாய் செய்தார்கள்; அதனை முழுமனதுடன் செய்யவில்லை.

**சாத்தான் அனனியாவின் இருதயத்தை நிரப்பியதால் அவன் பொய் சொன்னான். நீ மனிதனிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்ற வார்த்தைகளை கேட்ட அனனியா விழுந்து ஜீவனை விட்டான். அப்போஸ்தலர் 5:3-5** அனனியாவின் மனைவி சப்பீராள் கணவனுக்கு ஏற்பட்ட நிலையை அறியாமல் மூன்று மணி நேரத்திற்கு பின்பு உள்ளே வந்தாள். **அப்போஸ்தலர் 5:8** பேதுரு அவளை நோக்கி நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள்? எனக்குச் சொல் என்றான். ஆம் இவ்வளவுக்குத் தான் என்றாள்.

**பேதுரு தனக்கு சொல்லும்படி தான் கேட்டார். இது சப்பிராளுக்கு நல்ல ஒரு சந்தர்ப்பம் உண்மையைக் கூறுவதற்கு. ஆனால் சப்பிராள் இந்த நல்ல தருணத்தை இழந்து விட்டாள்.** அவள் அறியத்தான் கணவன் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தான். மனைவியின் பூரண ஒத்துழைப்புடன் தான் இது செய்யப்பட்டது.

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட விசுவாசிகள் கூட்டத்தில் இருந்து தேவையான அளவைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு ஒன்றும் குறைவாயிருக்கவில்லை. பூரண கிருபை பெற்றவர்கள்; **மறைவான காரியத்தில் ஈடுபட்டு, பொய் பேசி, மற்றவர்கள் செய்வது போல் செய்ய முயன்று நடித்து காண்பித்த கணவனும் மனைவியுமாக சேர்ந்து பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பொய் சொல்ல தைரியமாய் ஒருமனப்பட்டார்கள்.**

**"மறைவான காரியத்தில் ஈடுபட்டு, பொய் பேசி, மற்றவர்கள் செய்வது போல் செய்ய முயன்று நடித்து காண்பித்த கணவனும் மனைவியுமாக சேர்ந்து பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பொய் சொல்ல தைரியமாய் ஒருமனப்பட்டார்கள்.**

**அப்போஸ்தலர் 5:9-10** பேதுரு அவளை நோக்கி; புருஷனை அடக்கம் பண்ணியவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது. உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றார். உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். பொய், களவு கண்டு பிடிக்கப்பட்டது. தண்டனையும் வழங்கப்பட்டு விட்டது.

இதை வாசித்து கொண்டு இருக்கும் சகோதரியே! பரிசுத்த ஆவியானவர் உன்னுடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக்கொண்டிருக்கின்றார். **அனனியாவின் விலா சப்பீராள் கணவனையும் தன்னையும் தண்டனையிலிருந்து காப்பாற்றி இருக்கலாம்.** அனனியா சப்பீராளின் முடிவு எம்மில் யாருக்கும் ஏற்படக்கூடாது என்பதற்காக அனலின் இவ்வருட இறுதி சஞ்சிகைக்கூடாக தேவன் எச்சரிக்கின்றார்!. இன்னும் ஒரு சில மாதங்களில் இவ் வருடம் முடிவடையப் போகின்றது. உன்னை நீயே நிதானித்துப்பார். **பேதுரு மனிதன் தான், ஆனால் அவருக்கு கூறிய பொய் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொன்னதாக காணப்பட்டது.**

**ஸ்திரியே நீ எந்த தேவ மனிதனிடத்தில் பொய் சொன்னாய்; அது பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் கூறப்பட்டிருக்கிறது என்பதை நினைத்துக் கொள்.**

ஸ்திரியே நீ எந்த தேவ மனிதனிடத்தில் பொய் சொன்னாய்; அது பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் கூறப்பட்டிருக்கிறது என்பதை நினைத்துக் கொள். ஏறக்குறைய மூன்று மணிநேரம் மனந்திரும்ப சப்பீராளுக்கு இருந்தது. **அப்போஸ்தலர் 5:7** நடந்ததை அறியாமல் இருந்தாள். இது இவளுடைய அலட்சியத்தைக் காண்பிக்கிறது. **நீயும் கூட மனந்திரும்பமனமில்லாமல்; தெரிந்தும் தெரியாமல் பாவத்தை மூடப்பார்க்கின்றாயா? காலத்தை தாமதம் பண்ணாதே.** **அப்போஸ்தலர் 5:9** புருஷனை அடக்கம் பண்ணியவர்களுடைய கால்கள் வாசற்படியில் வந்திருக்கிறது என்று மரண எச்சரிப்பு கொடுத்தார். ஆனால் சப்பீராள் தேவ எச்சரிப்புக்கு செவிகொடுக்கவில்லை. உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றார். அப்படியே உயிரையும் விட்டு, நித்திய ஜீவனையும் இழந்துவிட்டாள். அழகி என்ற பெயர் அர்த்தம் உள்ளவளுடைய வாழ்க்கையின் முடிவு அலங்கோலமாய் போய்விட்டது. **காரணம் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பொய் சொன்னாள். ஸ்திரியே பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பொய் சொன்னால் தேவ ராஜ்ஜியத்திற்கு வெளியே தான் நாம் நிற்போம்.**

புதிய ஆண்டிற்குள் செல்ல முன்பு நம்மை நாம் நிதானித்து ஆராய்ந்து பார்ப்போம். சப்பீராளின் முடிவு எமக்கு வேண்டாம். காலதாமதம் இல்லாமல் மனந்திரும்புவோம். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு எல்லா சூழ்நிலையிலும் உண்மை பேசுவோம் என தீர்மானம் எடுத்து தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம்.

**திருமதி. J.பிலிப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீத்து - சென்ற வார தொடர்ச்சி...

# பக்தர்களின் பயிலகம்



## தீத்து

அதிகாரம்
01 – 03

### 03.கிறிஸ்தவ அடிமைகள்
தீத்து 2:9–15

இங்கு பவுல் கிறிஸ்தவ அடிமைகள் தவிர்க்க வேண்டிய மூன்று பொதுவான பாவங்களைக் குறித்துக் கூறுகின்றார்.

01. கீழ்ப்படியாமை

இவர்கள் தங்கள் எஜமான்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களை பிரியப்படுத்த வேண்டும். **அதாவது மேலதிகமாக ஒரு மைல் போவது.** இருதயத்தினால் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படிய முடியும். **முறுமுறுப்போடு வேலை செய்யவும் முடியும்.** சில இரட்சிக்கப்படாத எஜமான்கள் யோசனை இன்றி தங்கள் வேலைக்காரரிடம் கூடிய வேலை வாங்குவார்கள்.

02. எதிர்த்துப் பேசுதல்

அடிமை ஒருவனால் ஏதாவதொன்று செய்ய முடியாமல் இருக்கும் போது அவன் எஜமான் ஒழுக்க நடவடிக்கைக்கு அவனை உட்படுத்த முடியும். **இந்த சந்தர்ப்பத்தில் அடிமை வாதாட இடமுண்டு. வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மற்றோருக்கு தன் எஜமானைக் குறித்துச் சொல்ல ஏதாவது இருக்கும்.** இது ஒரு கிறிஸ்தவ அடிமைக்கு உகந்த சாட்சியாக அமையாது.

03. இவர்கள் களவாடுதலைத் தவிர்க்க வேண்டும்

இந்தப் பாவம் தான் ஒநேசிமு பிலேமோனுக்கு எதிராகப் புரிந்திருக்க வேண்டும். (பிலேமோன் *18*). **ஒரு அடிமை ஏதாவது ஒரு சிறு பொருளை எடுத்து விற்று பின் அது தொலைந்து விட்டது அல்லது உடைந்து விட்டது என இலகுவாகச் சொல்ல முடியும்.** இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைகள் இல்லை, ஆனால் வேலையாட்கள் உண்டு. **ஆனால் இந்த தொழில் புரிவோர் எவ்வளவு களவாடுகிறார்கள்? (உதாரணம்: அலுவலகத்தில், கம்பனியில்)**

பவுல் கிறிஸ்தவ அடிமைகள் திருடாமல் நல் உண்மையைக் காக்க வேண்டும் எனக் கூறுவதற்கு தகுந்த காரணங்கள் உண்டு. **நாம் உண்மையாய் சேவை செய்யும் போது வேதத்தை அழகுபடுத்துகின்றோம், அலங்கரிக்கின்றோம்.** மாத்திரமல்ல கிறிஸ்தவ செய்தியை அவிசுவாசிகளுக்கு கவர்ச்சிகரமாக மாற்றுகிறோம். **இங்கு பவுல் தீத்து 2:9இல் இரட்சகர் எனக் குறிப்பிடுவதையும் பின் அதன் அர்த்தத்தை விரிவுபடுத்துவதையும் காணலாம்.** எப்படி இந்த இரட்சகர் என்றதன் அர்த்தத்தைக் காண்பிக்கின்றார் என்றால்: **கிறிஸ்து மூலமாக நாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பில் என்ன அடங்கி இருக்கிறது என்பதனை விளக்குவதன் மூலம் ஆகும்.** இங்கு கிருபையைப் பற்றி அழுத்திச் சொல்லப்படுகிறது. **பவுல் தேவ கிருபையானது புரியும் மூன்று வித செய்கைகளை எடுத்து விளக்குகின்றார்.**

## 01. தேவ கிருபை நம்மை மீட்கிறது – தீத்து 2:11,14

ஜனங்களால் தங்களைத் தாங்களே இரட்சிக்க முடியாது. **தொலைந்து போன மனுக்குலத்திற்கு தேவ கிருபை தான் இரட்சிப்பைக் கொண்டு வர வேண்டும்.** இரட்சிப்பு பாவிகளினால் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. **இது கிறிஸ்துவின் மரணத்தின் மூலமும் உயிர்ப்பின் மூலமும் உண்டானது.** யார் எல்லாம் பாவத்தின் அடிமைத் தனத்தில் இருந்தார்களோ அவர்களை மீட்கும்படி தன் குமாரனை கிருபையாக அனுப்பினார்.

**இந்த இரட்சிப்பு எல்லா மனுஷருக்குமாகும். ஏற்றுக் கொள்பவன் பெற்றுக் கொள்வான்.** இங்கு சர்வலோகத்திற்கான தேவை தென்படுகிறது. ஆனால் தேவன் உண்டுபண்ணிய பரிகாரமும் சர்வலோகத்திற்குமேயாகும். **மீட்பு எனும் போது "விலையை செலுத்துவதன் மூலம் விடுதலை ஆக்குவது" என்பதே பொருள்.**

## 02. தேவ கிருபை நம்மை சீர்படுத்தும் – தீத்து 2:12,14

இரட்சிப்பு நிலை மாற்றத்தை மாத்திரம் உண்டுபண்ணுவதில்லை. **அது நம் மனப்பாங்கில், ஆசைகளில், குறிக்கோள்களில், செயல்பாடுகளிலும் மாற்றத்தை உண்டு பண்ணுகிறது.** இந்தக் கிருபையானது நம்மை இரட்சித்து தேவ பக்தியுள்ளவர்களாக நம்மை மாற்றுகிறது. **தேவ பக்தியுள்ளவர்களாக நாம் மாறும் போது தேவன் விரும்புவதை மாத்திரம் நாம் செய்து அதன் மூலம் தேவனை மகிமைப்படுத்துவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. தேவ கிருபை பலன் அளிக்கிறது – தீத்து 2:13

நாம் கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்கிறோம். இது நம் நம்பிக்கை. **இது நம் ஆனந்த பாக்கியம்.** இப் பகுதியில் இதைக் குறித்த வேறு விளக்கத்தை பவுல் தரவில்லை.

## 04. கிறிஸ்தவ பிரஜைகள் – தீத்து 3:1–8

ரோம சாம்ராஜ்ஜியத்தில் கிறிஸ்தவர்கள் சந்தேகத்தோடேயே பார்க்கப்பட்டார்கள். **ஏனெனில் அவர்களது நடத்தை வித்தியாசமானதாக இருந்தது.** கிறிஸ்தவன் நல்ல பிரஜையாக விசுவாசத்தையும், திவ்விய சத்தியங்களையும் விட்டுவிடாதவனாக இருக்க வேண்டும்.

**எப்படிப்பட்ட குணாதிசயம் ஓர் நல்ல கிறிஸ்தவ பிரஜையிடம் காணப்பட வேண்டும் எனக் கூறவும் பவுல் தவறவில்லை.**

01. துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருத்தல்

02. சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருத்தல்

03. தூஷிக்கக்கூடாது

04. சண்டை பண்ணக்கூடாது

05. பொறுமையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்

06. சாந்த குணத்தைக் காண்பிக்க வேண்டும்.

ஏன் இப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கான விளக்கத்தையும் பவுல் தருகின்றார்.

**இத் தருணத்தில் தம் முன்னைய வாழ்க்கையின் தரத்தை எடுத்துக்காட்டுகின்றார். அது எப்படிப்பட்டதெனப்பார்ப்போம்.**

01. புத்தியீனன்

02. கீழ்ப்படியாதவர்கள்

03. வழிதப்பி நடக்கிறவர்கள்

04. பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்கள்

05. துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணியவர்கள்

06. பகைக்கப்படத்தக்கவர்கள்

07. ஒருவரை ஒருவர் பகைக்கிறவர்கள்

இப்படியெல்லாம் கூறி இதையும் இரட்சிப்போடு இணைக்கின்றான். **முதல் எப்படி இரட்சிப்போடு கிருபையை இணைத்தாரோ இப்போ அதோடு சம்பந்தப்பட்ட வேறு காரியங்களையும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காண்பிக்கிறார்.** அவைகள் தயை, அன்பு, இரக்கம் தீத்து 3:4,5. **இது உண்டுபண்ணும் விளைவு என்ன? நம்பிக்கை, சுதந்தரர்.**

## 05. பிரச்சினையான மக்கள் – தீத்து 3:9–11

எங்களது சபைகளில் பிரச்சினைக்குரிய மக்கள் இருக்கக்கூடாது என நாம் விரும்புவோம். **ஆனால் மக்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே பிரச்சினைகள் இருந்தே ஆகும்.** இங்கு பவுல் விசுவாசத்தின் அப்பிரயோஜனமான காரியங்களைக் குறித்து தர்க்கிப்போரை விட்டுவிலகும்படி கூறுகின்றார்.

**முடிவாக பவுல் தன் தனிப்பட்ட சில காரியங்களைக் கூறி இந் நிருபத்தின் கருப்பொருளை அழுத்தி சொல்லி 14ஆம் வசனத்தில் முடிக்கின்றார்.**

**நன்றி**

*(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)*

**முற்றும்**

### பரிசுத்த வேதம்

சத்திய வேதம் நித்திய வழியில்
நிலை தவறாது நடத்திடு முனை
எத்திசை யெங்கு மதன் மகிமை
மனிதனை மாற்றிடும் பாவவழி நீக்கி
வழிதெரியாதவர்க்கு வழிகாட்டும்
ஆத்மீக ஒளியிழந்தார்க்கு ஒளிகொடுக்கும்
தேனிலும் தெளிதேனிலும் சுவையானது
ஆத்துமாவைப் போசிக்கும் நல்லாகாரம்
மாற்றும் மனிதனை மனிதனாக
நடப்பிக்கும் தேவ சித்தத்தை மண்ணுலகில்
வழி இதுவே என விடும் அறைகூவல்
தம் வழியில் நடப்போரை சேர்க்கும் பரலோகில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி - 58




குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம். - நன்றி

## இடமிருந்து வலமாக

01. சவுலின் மனைவியின் தகப்பன்
06. கர்த்தர் இந்த வனாந்திரத்தை அதிரப்பண்ணுகிறார்
09. ........... அடைந்தவன் தேன்கூட்டையும் மிதிப்பான்; பசியுள்ளவனுக்கோ கசப்பான பதார்த்தங்களும் தித்திப்பாயிருக்கும்
11. இவள் நெற்றியில் ஆணி அடித்து சிசெராவைக் கொன்றாள்
12. இவன் மிகாயாவை கன்னத்தில் அடித்தான்



## வலமிருந்து இடமாக

02. இந்தக் கோத்திரம் 41500 பேர்
03. இவன் கில்காலிலே கர்த்தருக்கு முன்பாக ஆகாகைத் துண்டித்துப் போட்டான்
07. யூதருக்குள்ளே இந்த தெய்வமும் வழிபட்டது
08. எரேமியா தீர்க்கதரிசியினால் இந்த இடம் மண்மேடாய் போகுமென தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது
10. இதன் கொடிமுடியும் காய்ந்து போகும்
15. நான் எப்படிச் செய்தேனோ அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிகட்டினார் என்றவன்

## மேலிருந்து கீழாக

01. இந்த ராஜா நியாயப்பிரமாணத்தையும் ராஜ நீதியையும் அறிந்தவர்களிடத்தில பேசுவது தனக்கு வழக்கமாயிருக்கிறது என்றான்
02. அர்தசஷ்டாவின் வனக்காவலன்
04. தேறின ........... எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்
05. விசுவாசத்தினால் உண்டாகும் ....... விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது

## கீழிருந்து மேலாக

13. இந்த ராஜா தன் மரண நாள் மட்டும் குஷ்டரோகியாயிருந்தான்
14. சவுலுடைய மேய்ப்பருக்கு இவன் தலைவனாயிருந்தான்
15. இவன் சித்திரக்கொத்து வேலைக்காரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைக்கு பரிசு



## வேதப்பகுதி: மத்தேயு 25:14–21

**50** ரூபாய் தாள் தரையில் கிடப்பதைக் கண்ட அசோக் அவசரமாக எடுத்து சட்டை பையில் வைத்துக் கொண்டான். **ஐம்பது ரூபாய்க்கு சாக்லெட், ஐஸ்கிரீம் என நிறைய வாங்கி சாப்பிடலாம் என கற்பனை செய்தான்.**



ஆனால் **பிறர் பொருளை இச்சியாதே!** என்று ஞாயிறு பள்ளியில் கேட்ட பாடம் நினைவுக்கு வந்தது. **பிறருடைய பணத்தை தன்னுடைய சந்தோஷத்திற்காக பயன்படுத்துவது பாவம் என்று உணர்ந்தான்.**

ஐம்பது ரூபாயைக் கொண்டு தலைமை ஆசிரியரிடம் கொடுத்தான். அவனுடைய நேர்மையைக் கண்டு வியந்த தலைமை ஆசிரியர் பலர் நடுவில் அவனை பாராட்டியதோடு, அந்த நல்ல பண்பிற்காக நூறு ரூபாய் விலையுள்ள ஒரு பொருளைப் பரிசாகக் கொடுத்தார்.

**தவறு செய்யத் தூண்டுகின்ற சோதனையை மேற்கொள்ள வேண்டும். தேவனுக்கு பயந்து உண்மையாய் வாழ்ந்தால் அதற்கு தேவன் தரும் நன்மைகள் அதிகமாகவேயிருக்கும்.**

**சிந்தனைக்கு: தவறு செய்வதினால் வருவது தற்காலிக சந்தோஷம்; தவறை செய்யாமலிருப்பதால் தேவன் தரும் சந்தோஷம் நிரந்தரமானது.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்!"
– டிசம்பர் 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருட்பணியாளர் சரிதை

## கிரஹாம் ஸ்டெயின்ஸ்

### 1941 – 1999



### இறைவனின் அடியார்கள் இறந்தும் பேசுவர்

1999ஆம் வருடம் ஜனவரி 23, இதயங்கள் உடைந்த நாள். கிறிஸ்துவின் அருட்பணியாளர்களுக்கு சவாலைத் தந்த நாள்.

**கிரஹாம் ஸ்டெயின்ஸ் என்ற தொழு நோயாளிகளின் நண்பனும், அவரது இரு சின்னஞ் சிறிய தூதர்களைப் போன்ற குழந்தைகளும் தீயில் உயிருடன் கருகிய நாள்.**

இந்திய நாட்டில் ஒரிசா என்ற மாநிலம். தொழுநோயாளிகளுக்கென அமைக்கப்பட்ட அந்த மையத்திற்கு 1965ஆம் ஆண்டு கிரஹாம் ஸ்டெயின்ஸ் அடி எடுத்து வைத்தார். கடவுளின் அன்பை தொழுநோயாளிகளுக்கு காட்டி, அவர்கள் வாழ்வுக்கு மறுவாழ்வு கொடுக்கவே அவர் அங்கு சென்றார். இளமையிலேயே ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்த இவர் 1983ஆம் ஆண்டு நற்குணசாலியான ஊழியர் கிளாடிஸ் என்ற ஆஸ்திரேலிய பெண்மணியை மணந்தார். இவரும் ஏற்கனவே இந்தியாவில் கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றியவர். இன்னும் செயலில் காட்டிக் கொண்டிருக்கிறார்.

**தீயகுணம் நிறைந்த திருட்டு மனிதர் கூட்டம் அன்று (23.01.1999) அவர்களைச் சூழ்ந்து கொண்டது. கிரஹாம் ஸ்டெயின்ஸ், மகன்கள் பிலிப் (11), திமோத்தி (7) ஆகியோர் தங்கள் வாகனத்தில் இரவு உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அந்தக் கொடூரம் நடந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடர் கைகளில் சிக்கிய மான்களைப் போல, கயவர்களின் கைகளில் மாட்டி சிக்கிக் கொண்டனர். **அந்தோ பரிதாபம், சின்னஞ்சிறு பாலகர்கள் தங்கள் தந்தையை இறுகக்கட்டிப்பிடித்துக்கொண்டு, கதறி அழுது கொண்டிருக்கும் போதே, அவர்கள் ஈவு இரக்கமற்றவர்களால் மனச்சாட்சியேயில்லாமல் உயிருடன் தீயில் கொளுத்தப்பட்டனர்.** கருகிய மலர்களான அவர்கள் கிறிஸ்துவில் மாந்தனர்.

அவர் விட்டுச் சென்ற 80 தொழுநோயாளிகளையும் அவர் மனைவி கிளாடிசும், மகள் எஸ்தரும் கனிவாய் கவனித்து வருகின்றனர்.

**அன்பரே! உங்கள் வாழ்வால் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எத்தனைபேர்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: எனது தந்தையும் எனது சகோதரர்களும் கிறிஸ்துவுக்காக மரிப்பதற்கு பாத்திரர் என்று கண்ட என் ஆண்டவரைத் துதிக்கிறேன் — எஸ்தர் ஸ்டெயின்ஸ் (மகள்)**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 23*

---

# அடா லீ

## 1856 – 1948

## உங்களோடு இருக்கும் தேவன்



அடைமழை, இடி, புயல் காற்று, தொடர்ந்தது நிலச்சரிவு. ஐயோ! ஒரே குடும்பத்தில் ஆறு குழந்தைகள் நிலச்சரிவினால் மண் அடியில் புதையுண்டு போயினர்.

அடா லீ செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தவர். மிஷனெரியாக அமெரிக்காவை விட்டு இந்தியாவிற்கு வந்தார். தன் கணவர் டேவிட் லீயுடன் வங்காளத்தில் பணியாற்றினார்.

**லீ குடும்பத்தின் ஆறு குழந்தைகளும் டார்ஜிலிங்கில் தங்கி படித்துக் கொண்டிருக்கும் போது ஏற்பட்டதே அக் கொடூரத் துயரச் சம்பவம். அடா லீ தன் பிள்ளைகள் அனைவரையும் இழந்தார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் சோகம் அவருக்கு ஒரு வேகத்தைக் கொடுத்தது. கிறிஸ்துவிற்காகத் தான் செய்ய வேண்டிய பாகத்தை உணர்த்தியது. வங்காளத்தின் ஆதரவற்றக் குழந்தைகள் மீது கனிவான தாகம் ஏற்பட, நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளின் தாயாக மாறினாள்.

1943, 1944ஆம் ஆண்டுகளில் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது பசியினால் வாடிய 522 குழந்தைகளை அரவணைத்து ஆதரித்தார். அத்தனை குழந்தைகளுக்கும் உயர்வான கல்வியை அளித்தார்.

வங்கள காச நோய் தடுப்பு இயக்கத்தில், அதிக பொறுப்பு ஏற்று, தீவிரமாக செயல்பட்டதால் அடா லீக்கு அரசாங்கமே தங்கப் பதக்கம் பரிசளித்து அவரை கௌரவித்தது.

**தன்னை அழைத்த தேவனுக்கு உண்மையுடன் உழைத்தார் அடா லி. இவர் விடுதியில் படித்த ஒருவர் பேராயராக மாறினார். பலர் தலைமை ஆசிரியர்களாகவும் மற்றும் பலர் உயர் பொறுப்புக்களையும் பெற்றனர்.**

வங்காளத்தில் எழுப்புதல் ஏற்பட அடா லீயும் காரணமானார். லீ ஞாபகார்த்த மிஷன் என்ற பெயரில் அவர் ஆரம்பித்த பணி இன்றும் தொடர்கின்றது.

**அன்பரே! இழப்பிலும் இறைவன் உங்களோடு இருக்கின்றார் என்பதை உணர்கின்றீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இதுவரைக்கும் கர்த்தர் செய்த உதவிக்கு நன்றியுள்ளவனாயிரு. இனி அவர் செய்யப் போகும் உதவிக்கு நம்பிக்கையுள்ளவனாயிரு.**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 23*

**24. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்.**
**25. தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்.**
**யோவான் 12:24-25**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி – 57
## சரியான பதில்கள்

<u>இடமிருந்து வலமாக</u>

03. விவேகத்தின்
06. கேடகமானவர்
08. கீசோன்
09. வல்லூறு
10. அப்பொல்லியோன்

<u>வலமிருந்து இடமாக</u>

02. எபிரோனுக்கு
04. ஆகாபுடைய
05. சீஷாக்
07. கர்மேலில்

<u>மேலிருந்து கீழாக</u>

01. ஏவில்மெரோதாக்
02. எபிரேயர்களோடே

<u>கீழிருந்து மேலாக</u>

10. அர்மகெதோன்
11. பொவனெர்கேஸ்





# வினா விடை – 60

01. ஆசீர்வாதம் கேட்ட ராஜா யார்?
02. வெயில் பட்டதினால் கறுப்பாய்ப்போன ஸ்திரி யார்?
03. வேலைக்காரியினிமித்தம் ஆசீர்வதிக்கப்பட்ட எஜமான் யார்?
04. யாருடைய தகப்பன் ஜுரத்தினால் வருத்தப்பட்டுக் கிடந்தான்?
05. பகலிலே வெயிலும், இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது என்று சொன்னவன் யார்?
06. கர்ப்பமாயிருக்கும் போதே மிக துன்பப்பட்ட ஸ்திரி யார்?
07. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன் என்றது யார்?
08. குடல் வியாதி வந்து விரும்புவாரில்லாமல் செத்துப்போன ராஜா யார்?
09. பிறக்கும் போது கையில் சிவப்பு நூல் கட்டப்பட்ட பிள்ளை எது?
10. வெயிலாவது உஷ்ணமாவது படாதவர்கள் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடை - 59
# சரியான பதில்கள்

01. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் - 1யோவான் 1:7

02. மோசே - எண்ணாகமம் 11:15

03. எரேமியா - எரேமியா 38:6-10

04. எலிசாவோடிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவன் - 2இரா 4:38-41

05. எலியா - 1இராஜாக்கள் 19:4

06. பவுலோடு கப்பல் பிரயாணம் செய்த 276 பேர் - அப்போஸ்தலர் 27:33-37

07. 12 வருஷமாய் பெரும்பாடுள்ள ஸ்திரி - லூக்கா 8:43

08. எசேக்கியா - 2நாளாகமம் 32:30

09. யோபு - யோபு 10:1

10. இஸ்ரவேலர் 12பேர் - யோசுவா 4:1-9

# குறுக்கெழுத்துப் போட்டி 57
# சரியான பதில் எழுதியவர்கள்

01. செ.எலிசம்மா - நாவற்குழி
02. எஸ்.மாக்கிறட் - மீசாலை
03. எஸ்.சனோஜா - மீசாலை
04. ச.யோகேஸ்வரி - மீசாலை
05. கருணாகரன் சுபாசினி
06. பி.நேசமணி - மானிப்பாய்
07. அ.துர்க்கா - காரைநகர்
08. ரி.சிவாஜினி- காரைநகர்
09. பா.தர்சினி - காரைநகர்
10. பா.கோமதி - காரைநகர்
11. கே.சயிதா - காரைநகர்
12. ம.டயானி - பாண்டவெட்டை
13. பா.மோகனதாஸ் - காரைநகர்
14. பா.டிலானி - காரைநகர்
15. லோ.வதனி - காரைநகர்
16. மு.சுபாஜினி டனி - நாவற்குழி
17. த.முகுந்தராசா - நாவற்குழி
18. மே.குளோறா - நாவற்குழி
19. ஏ.அரியம் - ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் ஆன்மீக விருந்து!



## பாவத்தையும், துக்கங்களையும், உலகத்தையும் மேற்கொள்ள; தேவ ஆவியானவருடைய அபிஷேகம் வேண்டும்

**11கொரிந்தியர் 3:17 கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.**

இது கடைசிக்காலமாக இருக்கின்றது. அத்துடன், இந் நாட்கள் தேவ ஆவியானவர் அதிகமாய் ஊற்றப்படுகின்ற நாட்களாக இருக்கின்றது. **பெந்தெகொஸ்தே நாளில் தேவனுடைய வல்லமை அதிகமாய் பொழியப் பட்டதை நாம் காணலாம். ஆதி சபையில் இருந்த தேவ வல்லமை இந்தக் கடைசிக் காலங்களில் பின்மாரியாய் பொழியப்படும் என்ற வாக்குத்தத்தங்கள் பரிசுத்த வேதாகமத்தில் காணப்படுகின்றது.**

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு தூய ஆவியானவரின் அபிஷேகத்தால் நிறைக்கப்பட்டவர்கள் அனேகர் இருக்கின்றோம். எனவே நாங்கள் இந்த கடைசி நாட்களில் விழுந்து விடாதபடி வைராக்கியமுள்ளவர்களாய் கர்த்தருக்காய்ஓட வேண்டும்.

இயேசு கிறிஸ்து ஒரு வாக்குத்தத்தம் கொடுத்தார்: **நான் போகிறேன், நான் போன பிற்பாடு தேற்றரவாளனை உங்களுக்குத் தருவேன் என்றார். இந்த ஆவியானவர் நம்மை சகல சத்தியங்களுக்குள்ளும் நடத்துவார்.** எங்களை ஒரு உணர்வுள்ள கிறிஸ்தவர்களாக தேவனுக்கு பயப்படுகின்றவர்களாக வைத்திருப்பார் என்ற வாக்குத்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் வேதாகமத்தில் உண்டு. எனவே தேவனுடைய ஆவியான வரை பெற்று இந்தப் பூமியில் நாம் தேவனுக்கு சாட்சிகளாய் வாழ வேண்டும். **கர்த்தருடைய ஆவியானவர் எங்கள் வாழ்க்கையில் வருகின்ற போது விடுதலை பெற்ற ஒரு வாழ்க்கை வாழ முடியும். தேவனுடைய ஆவியானவரைப் பெற்றுக் கொண்டால்; பாவம், தூய்மை, பரிசுத்தம், அசுத்தம் எது வென்று கண்டுகொண்டு உணர்வுள்ள வாழ்க்கை வாழ முடியும்.** நாம் உணர்வில்லாதவர்களாக இருந்தால் கிறிஸ்தவ வாழ்க்கையை ஆண்டவர் விரும்பிய வண்ணம் வாழ முடியாது.

> ” தேவனுடைய ஆவியானவரைப் பெற்றுக் கொண்டால்; பாவம், தூய்மை, பரிசுத்தம், அசுத்தம் ஏதுவென்று கண்டு கொண்டு உணர்வுள்ள வாழ்க்கை வாழ முடியும்.

*ஒரு சிறிய கதையை கூறவிரும்புகின்றேன்; ஒரு ஐயா இருந்தார், அவர் ஒரு நாளும் புகையிரதத்தில் பயணித்ததில்லை. அன்றைக்கு ஒரு நாள் அவர் பயணம் செய்வதற்காக சென்றார். அப்போது புகையிரதம் வந்துவிட்டது. அவருக்கு அது புதிதாய் இருந்தபடியால் அதில் ஏறுவதற்கு சிறிது சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார். இவருக்கு பின்பதாக வெள்ளைக்காரன் ஒருவர் நின்றார். இந்த ஐயாவின் சங்கடத்தைக் கண்ட வெள்ளைக்காரன் அவரை புகையிரதத்தில் தூக்கி ஏற்றிவிட்டாராம். ஐயா ஒரு ஜன்னல் பக்கமாகவும், இவரை தூக்கி ஏற்றி விட்ட வெள்ளைக்காரன் எதிர்ப்புறமாகவும் அமர்ந்து கொண்டனர். இந்த ஐயா எப்பொழுதும் வெற்றிலையை சப்பி அதை ஜன்னல் வழியாக துப்பிக் கொண்டிருந்தாராம். அப்போது அந்த வெள்ளைக்காரன் சிந்தித்தாராம்: இந்த மனிதன் உணர்வில்லாமல் இப்படிச் செய்கின்றாரே, அந்த முதியவர் துப்புகின்ற துப்பல் என்மீது படுகின்றதே என்று தன்னுடைய இருதயத்தில் அதிகமாய் கோபப்பட்டர். இப்பொழுது இவர்கள் இறங்குகின்ற நிலையம் வந்த போது இறங்குவது எப்படி என்று தெரியாமல் ஐயா கொஞ்சம் சங்கடப் பட்டுக்கொண்டிருந்தார். இந்த நபரை ஏன் தூக்கி ஏற்றி விட்டேன் என்று கோபத்தில் இருந்த வெள்ளைக் காரன் அந்த ஐயாவின் முதுகில் உதைத்து விட்டாராம். அந்த ஐயா முன்பக்கமாக கீழே விழுந்தார். அப்பொழுது அந்த ஐயா எழுந்து தம்பி நான் ஏறும் போது எவ்வளவு அன்பாய் ஏற்றிவிட்டாய், இப்பொழுது இறங்கும் போது ஏன் இப்படி செய்தாய் என்று கேட்டாராம். அதற்கு வெள்ளைக்காரன் சொன்னாராம்: புகையிரதம் என்றால் அதில் ஏறுகின்ற முறை அப்படித்தான், இறங்குகின்ற முறை இப்படித்தான் என்றாராம்.*

இரட்சிக்கப்பட்ட நாம் எத்தனை பேர் உணர்வுள்ள கிறிஸ்தவர்களாய் இருக்கின்றோம். **கர்த்தருடைய ஆவியானவர் எங்கள் மேல் இருந்தால் எல்லா நேரத்திலும் உணர்வுள்ள கிறிஸ்தவனாயிருக்க முடியும்** இந்த நாட்களில் தேவனுடைய நாமம் தூசிக்கப்படுவதற்குரிய பெரும் பகுதி கிறிஸ்தவர்களின் உணர்வற்ற வாழ்க்கை. வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று சொல்லுகின்ற கர்த்தருடைய ஆவியானவர் எங்கள் ஒவ்வொருவர் மீதும் இருந்தால் ஒரு நல்ல கிறிஸ்தவனாய்மாற முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அந்த ஆவியான வரை ஒவ்வொருவரும் பெற்றிருக்க வேண்டும். **சிலர் பெற்றிருக்கின்றோம், சிலர் அதனைப் பெறப்போகின்றோம். சிலர் பெற்ற ஆவியானவரை இழந்து போயிருக்கின்றோம். நீங்கள் தூய்மையான வாழ்க்கை வாழ, அந்த ஆவியானவரைப் பெற்றுக் கொளள உங்களுக்கு தாகம், ஆவல் இருக்க வேண்டும்.** பழைய ஏற்பாட்டிலும் பரிசுத்தாவியான வரின் அடையாளங்களுக்கான செயற்பாடுகள் பல இருக்கின்றது. அதில் ஊழியர்களை அபிஷேகம் பண்ணுதல் என்று சொல்லி யாத்திராகமத்தில் தேவன் ஒரு கட்டளை கொடுக்கின்றார். அபிஷேகம் பண்ணுவதற்குரிய விசேஷித்த அபிஷேக தைலத்தை தயாரிக்க வேண்டும்என்று கூறுகின றார். அந்தக்கட்டளையில்அளவுகள், அதில்என்ன பொருட்கள் சேர்க்கப பட வேண்டும் என்று சொல்கின் றார். **யாத்திராகமம் 30:23-25 (23)மேன்மையான சுகந்தவர்க்கங் களாகிய சுத்தமான வெள்ளைப்போளத் தில் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி ஐந்நூறு சேக்கல் இடையையும், சுகந்த கருவாப்பட்டையிலே அதில் பாதியாகிய இருநூற்று ஐம்பது சேக்கல்இடையையும், சுகந்த வசம்பில் இருநூற்று ஐம்பது சேக்கல் இடையையும், 24. இலவங்கப் பட்டையில் ஐந்நூறு சேக்கல் இடையையும், ஒலிவ எண்ணெயில் ஒரு குடம் எண்ணெ யையும் எடுத்து, 25. அதனால், பரிமள தைலக்காரன் செய்வதுபோல, கூட்டப்பட்ட பரிமளதைலமாகிய சுத்தமான அபிஷேக தைலத்தை உண்டுபண்ணு வாயாக; அது பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கக் கடவது.** இந்த ஐந்து பொருட்களையும் அபிஷேக எண்ணை செய்வதற்கு பயன்படுத்த வேண்டும். அதற் கேற்ற அளவுப்பிரமாணத்தையும் கொடுக்கின்றார். ஆண்டவர் சொன்ன அளவின்படியே பொருட்கள் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டது தான் இந்த அபிஷேக தைலம்.

**தேவனுக்கென்று வேறுபிரிக் கப்பட்டவர்கள் பழைய ஏற்பாட்டிலே இந்த அபிஷேக தைலத்தினால் அபிஷேகிக கப்பட்டார்கள். இந்த அபிஷேக தைலம் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமா யிருக்கின்றது. இந்த நாட்களிே பரிசுத்த ஆவியானவரே எனக்குள்ளே வாரும் என்று கேட்கும் போது அவர் எங்களுக்குள் வருகின்றார்.** எவ்வளவு சலாக்கியம்!. அபிஷேக தைலத்தில் சேர்க்கப்பட வேண்டிய பொருட்களில்இருக்கின்ற தன்மை என்ன? அந்த தன்மை இந்த நாட்களில் பரிசுத்த ஆவியான வரில் எப்படி விளங்குகின்றது என்பதனைக் குறித்து தொடர்ந்து ஆராய்ந்து பார்ப்போம்.

## 01. வெள்ளைப் போளம்:

இது தான் அபிசேஷக தைலத்தில் சேர்க்கப்படுகின்ற





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பொருள். இது நறு மணம் வீசுகின்ற பசைத்தன்மை கொண்ட ஒரு பொருள். **இதற்கு பிரதானமான தன்மை ஒன்று இருக்கின்றது: என்னவென்றால், எங்களுடைய நாவில் அதை தொட்டு வைத்தால் அது கசக்கும். அதை மிகவும் வெறுப்போம். ஆகவே இந்த வெள்ளைப் போளத்தின் முக்கிய தன்மை: வெறுக்கும் தன்மை. தேவனுடைய அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய பிரதானமான தன்மை என்ன வென்றால், பாவத்தின் மீது ஒரு முற்று முழுவதுமான வெறுப்பு.** அப்படிப் பட்ட வெறுப்பு பாவத்தின் மீது வரவில்லையென்றால், நாங்கள் பெற்ற அபிஷேகத்தில் ஏதோ ஒரு கோளாறு. பாவத்தை செய்யக் கூடாது இது அசுத்தம், தேவனுக்கு பிரியமற்றது என்று சொல்கின்ற உணர்வு உங்களுடைய இதயத்தில் வருமானால் நீங்கள் தேவனுடைய அபிஷேகத்தை பெற்று வாழ்கின்றீர்கள்.

உங்களால் பாவத்தை வெறுக்க முடியவில்லை என்றால் ஆண்டவரே நான் தூய்மையாக வாழ வேண்டும் எனக்கு அபிஷேகத்தை தாரும் என்று கேளுங்கள். ***இயேசு கிறிஸ்து வனாந்தரத்திலே சோதிக்கப்பட்ட 40 நாட்களும் எந்த ஆகாரமும் உட்கொள்ளாமல் இருந்தார். அவர் ஆவியினால் நிறைந்தவராய் இருந்தார். நீர் தேவனுடைய குமாரனானால் இந்த கல்லுகளை அப்பமாக்கும் என்று சாத்தான் வந்து சொன்னான். மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயில் இருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையாலும் பிழைப்பான் என்று சொல்கின்றார்.*** இப்படியான பதில்களை பாவத்திற்கு எதிராக சொல்ல வேண்டுமாயிருந்தால் கிறிஸ்துவைப் போல் அபிஷேகம் நிறைந்த வாழ்வு வாழ வேண்டும். **நாம் இனங்கண்டு கொள்ளாத படி இந்த**

**99**

**நீங்கள் கர்த்தருடைய ஆவியானவரைப் பெற்றிருந்தால் அவர் உங்களுக்காய் வேண்டுதல் செய்து உங்களை தப்புவிப்பார்.**

**பொல்லாத உலகத்திலே பாவம் நம்மை நெருக்குகின்றது. புரிந்து கொள்ளாதபடி பாவம் நம்மை தேடி வருகின்றது. நாம் அறிந்து உணர்வதற்கு முன்பு பாவம் எங்களைத் தொட ஆயத்தமாயிருக்கின்றது.** இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பாவத்தின் மீது ஒரு வெறுப்பு ஏமக்கு வர வேண்டும். **எல்லா சுவையானவற்றுக்குள்ளும் சுவையானதாக பாவம் இருக்கும். அபிஷேகம் இருந்தால் நாம் அதனை வெறுப்போம்.** பூமியிலே சாட்சியாய் இருக்கவும், உலகத்தையும், பாவத்தையும் வெறுக்கவும் எமக்கு அபிஷேகம் வேண்டும். **ரோமர் 8:26 அந்தப்படியே ஆவியான வரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.** எங்களுக்கு புரியாத காரியங்களில் எங்களுக்காக ஜெபிக்கின்றவர் தூய ஆவியானவர். எங்களுக்கு அருகில் நெருங்கி வருகின்ற பாவத்தைக் குறித்த அறிவு எங்களுக்கு இல்லாமல் இருக் கலாம். **அனால் நீங்கள் கர்த்தருடைய ஆவியானவரைப் பெற்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தால் அவர் உங்களுக்காய் வேண்டு தல் செய்து உங்களை தப்புவிப்பார். எத்தனையோ வலிபர்கள் வாழ முடியாதபடி விழுகிறார்கள். பாவம் என்று தெரிந்து கொண்டும் விழுகின் றார்கள். ஒரு ஊழியன் இவ்விதமாய் கூறினார்: கிறிஸ்தவர்கள் விழுந்து கொண்டேயிருக்கிறார்கள். அப்படியானால் எப்பொழுது விழாமல் இருப்பது? பரிசுத்தத்தில் நன்றாக வளர்ந்த வர்கள் கூட விழுந்து போகின் றார்கள். பிரியமானவர்களே, பரிசுத்த ஆவியானவரு டைய அபிஷேகத்தைப் பெற்றுக் கொள் வோம். பாவத்தின் மீதும் உலகத் தின் மீதும் வெறுப்பு கொள்வோம்.

## 02. சுகந்த கருவாப்பட்டை:



இது ஒருவித மரத்தின் பட்டை. இதை சில பொருட்க ளோடு சேர்க்கும் போது அதிலி ருந்து சுகந்த வாசனை வரும். சிலர் சில வாசனையை வைத்தே அது என்ன காரியம் என்று புரிந்து கொள்வார்கள். **அபிஷேகம் பெற்றவர் கள் வாசனை வீசுவார்கள். தேவனுடைய ஆவியினாலே நிரப்பட்டவர்களுடைய வாழ்க்கையோ, செயல்களோ, சிந்தனை களோ, பார்வைகளோ எல்லாவற்றிலும் வாசனை நிறைந்ததாய் இருக்கும்.** இன்றைக்கு அனேகருடைய வாழ்க்கையில் நாற்றம் வீசுகின்றது. தேவனு டைய ஆவியின் அபிஷேகத்தை பெற்றவர்கள் கூட பின்வாங்கிப் போகின்றார்கள், விழுந்து போகி றார்கள். அவர்களால் வாசனை வீச முடியவில்லை. பிரியமானவர் களே, நீங்கள் அபிஷேகத்தை பெற்று அதைக் காத்துக் கொள் ளும் படி உங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தால் உங்களுடைய வாழ்க்கை வாசனை வீசிக் கொண் டேயிருக்கும்.

வாசனை வீச வேண்டும் என்பதற்காக அனேக வாசனைத் திரவியங்களைப் பாவிக்கின்றோம். வாசனை மற்றவர்களை கவரும், அபிஷேகம் பெற்ற வர்கள் கிறிஸ்துவுக்காக வாசனை வீசி கிறிஸ்துவுக்காய் மற்றவர்களைப் பிடிக்க வேண்டும். **ஆதியாகமம் 8:20-21 (20.) அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து கொண்டு, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான். 21. சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவு கள் அவன் சிறு வயதுதொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை.** இங்கே சுகந்த வாசனையை கர்த்தர் முகர்ந்தார். அது அவருக்கு கோபத்தை தணியச் செய்தது. **இந்த சுகந்த வாசனை இளைப்பாறப் பண்ணுகின்ற தன்மையைக் கொண்டது. நாங்கள் ஆவியானவருடைய அபிஷேகத்தைப் பெற்றிருந்தால் எங்கள் மீது கர்த்தருக்கு இருக்கின்ற கோபம் தணியும். எங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வார்த்தைகள் மற்றவர்களை தேற்றும், இளைப்பாறப்பண்ணும்.** அபிஷேகம் பெற்றிருந்தால் மற்றவா களுக்கு பிரியமான, சாட்சியுள்ள வாழ்க்கை வாழலாம்.

சுகந்த வாசனையை வீசுங்கள் உங்கள் நிமித்தம் எத்தனையோ நன்மைக்குரிய மாற்றங்கள் வரும். பேச்சிலே, நடக்கையிலே அந்த வாசனை தெரியும். மமதையாய், இறுமாப்பாய் கதைக்க மாட்டோம். ஆவியானவருடைய அபிஷேகம் வருகின்ற போது உள்ளான மாற்றம் நிகழும். **11கொரிந்தியர் 4:16 ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.** அதாவது, பாவ இச்சையில் விழாத படி காத்துக் கொள்ளும். ஆகவே தூய்மையாய் வாழும் போது எங்கள் வாழ்க்கை தேவனுக்கு சுகந்த வாசனையாயிருக்கும். *சொந்த மனைவியை விட்டு இன்னொரு பெண்ணை நாடுகின்றார்கள், கணவன் உயிரோடிருக்கும் போதே இன்னொருவரை நாடுகின்றார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் இரட்சிக்கப்படாதவர்களோடு உறவு வைக்கிறார்கள், திருமணம் செய்கிறார்கள்.* எங்களாலேயே தேவனுடைய நாமம் தூஷிக்கப் படுகின்றது.

ஆண்டவருக்காய் வீச வேண்டிய வாசனைகள் நாற்றமாய், அசிங்கமாய் மாறுகின்றது. நாங்கள் கிறிஸ்துவின் நற்கந்தகங்களாயிருக்கின்றோம். **கலாத்தியர் 6:14 நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில றையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்.** நாங்கள் தேவனுடைய பிள்ளைகளாய் வாசனை வீச வேண்டுமானால் அபிஷேகத்தைப் பெற்று கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தரித்தவர்களாய் வாசனை வீச வேண்டும். மற்றவர்களுடைய வாசனையை குறித்து சிந்திக்காமல், ஆண்டவரே உமக்காய நான் சுகந்த வாசனை வீசவேண்டும் என்று கேளுங்கள். *சிலர் வெளியே வாசம் வீசுவது போல காட்டிக் கொண்டு வீட்டிலே நாற்றம் வீசிக்கொண்டிருப்பார்கள். வெளியே உண்மை பேசுவார்கள்; வீட்டிலே பொய் பேசுவார்கள். வெளியே மனைவிக்கு அடிக்க மாட்டார்கள்; வீட்டிலே வைத்து அடிப்பார்கள். வெளியிலே சிரித்துக் காண்பிப்பார்கள்; வீட்டிலே சண்டை பிடிப்பார்கள். ஆலயத்திலே கை உயர்த்தி ஆராதிப்போம்; வீட்டிலே கை கட்டிக் கொண்டிருப்போம். எங்களுடைய வாசனைகளும் பொல்லாதவைகளாயிருக்கும்.*

சில துர்நாற்றத்தை சுவாசித்தால்கூட அது நோயைக்கொண்டு வரும். **அதே போல எங்களுடைய அசுத்தமான வாசனை மற்றவர்கள் கெட்டுப்போக வழி வகுக்கும். நல்ல வாசனை வீசுங்கள் அது மற்றவர்களை குணமாக்கும், காயங்கட்டும்.** எத்தனையோ கிறிஸ்தவர்கள் வீசிய நாற்றமான வாசனையினால் அனேக கிறிஸ்தவர்கள் விழுந்து போகின்றார்கள். கெட்ட வாசனை வீசுபவர்கள் ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பின் நாளில் கணக்கு கொடுக்க வேண்டி வரும். கிறிஸ்தவ வாசனையை காத்துக்கொண்டவர்கள் அந்த நேரத்தில் சந்தோஷம் அடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. சுகந்த வசம்பு:



இது அபிஷேக தைலம் தயாரிப்பதற்கு சேர்க்கப்பட வேண்டிய மூன்றாவது பொருள். இது ஒரு வகையான வேர். வேர் இலையிலோ, கிளையிலோ இருக் காது. அது நிலத் திற்கு கீழ் தான் இருக் கும். **இந்த சுகந்த வசம்பு தாழ்மைக்கு அடையா ளம். ஆவியின் அபிஷே கம் பெற்றவர்கள் எப் போதும் தாழ் மை யாக இருப்பார்கள். இந்த அபி ஷேகம் பெற்றவர்கள் பெரும்பாலானோர் தாழ் மைக்கு நேராகவே நடக் கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு போதும் மேன்மைபாராட்ட மாட் டார்கள்.** *ஒருவரை நான் சந்திக்க நேர்ந்தது: அவர் மிகவும் கசங்கிய சேட், வேட்டி அணிந்திருந்தார். அவர் ஆண்டவரை அறிந்தவர், அவர் கதைக்கும் போது யாராவது ஊழியர்கள் சுத்தமாய் ஆடை அணிந்து வந்தால் அது அவருக்கு பிடிக்காது. அவர் சொல்லுவார்: அவர்கள் பெருமை பிடித்தவர்கள். என்னைப் பாருங்கள் நான் கசங்கிய ஆடை அணிந்திருக்கின்றேன் என்பார்.* ஆனால் ஆண்டவர்இதனை எதிர்பார்க்கவில்லை. ஆண்டவர் சுத்தத் தையே விரும்புகின்றார். அந்த நபருடைய மனநிலையிலே நான் ஒருவன் தான் தாழ்மையுள் ளவன் என்ற மேட்டிமை இருந்தது.

தாழ்மை இருதயத்தில் ஆரம்பிக்க வேண்டும். *சிலர் வசதியானவர்கள் போல் தெரிவார்கள்; ஆனால் ஏழைகளாயிருப்பார்கள். சிலர் ஏழைகளைப் போல் இருப்பார்கள்; ஆனால் வசதியானவர்களாயிருப்பார்கள். சிலர் வெளித் தோற்றத்தை வைத்து கணிப்பார்கள்; ஆனால் ஆண்டவர் இருதயத்தைப் பார்க்கிறார்.* தாழ்மை இருதயத்தில் இருக்கின்றது. *இரண்டு பேர் ஜெபம் பண்ணப் போனார்கள், ஒருவன் பரிசேயன் – மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் ஆலயத்திற்கு வந்து ஆண்டவரே, கிழமையில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன், தசம பாகம் கொடுக்கிறேன் என்று சொல்லி இந்த ஆயக்காரனைப் போல நான் இல்லை, ஆண்டவரே என்று சொல்லி ஜெபித்தான். ஆனால் ஆயக்காரன் தூரத்தில் நின்று வானத்தையும் அண்ணார்ந்து பார்க்க முடியாமல் தன் மார்பிலே அடித்து பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான். இயேசு சொன்னார்: பரிசேயன் அல்ல, இந்த ஆயக்காரனுடைய ஜெபமே கேட்கப்பட்டது என்றார்.* இது தான் உண்மையானதாழ்மை.

**ஆவியானவருடைய அபிஷேகம் இருந்தால் தாழ்மையாய் கதைப்போம், கனம் கொடுக்க வேண்டிய இடத்திலே கனம் கொடுப்போம். போதகரோடு எப்படி பேச வேண்டும் என்று தெரிந்திருக்கும். அபிஷேகம் இல்லாவிட்டால் தாறுமாறாய் பேசுவோம். போதகர்களை தாக்குகின்றவர் களாய் பேசுவோம்.**

வெளித்தோற்றத்தை வைத்து தாழ்மையை ஒரு போதும் கணிக்காதீர்கள். ஆவியானவருடைய அபிஷேகம் இருந்தால் தாழ்மையாய் கதைப்போம், கனம்கொடுக்க வேண்டிய இடத்திலே கனம் கொடுப்போம். போதகரோடு எப்படி பேச வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்திருக்கும். அபிஷேகம் இல்லாவிட்டால் தாறுமாறாய் பேசுவோம். போதகர்களை தாக்குகின்றவர்களாய் பேசுவோம். *ஒரு நபர் என்னோடு பேசும் போது ஒரு போதகரை குறித்து மிகவும் இழிவான வார்த்தைகளால் பேசினார். தேவனுடைய தாசர்களை தூஷிக்கின்ற போது மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.* அபிஷேகம் பெற்றவர்கள் தாழ்மையாய் பேசுவார்கள். ஒருவர் இவ் விதமாய் கூறினார்: *ஒருவர் கதிரையில் இருக்கின்ற நிலையை வைத்து அவர் தாழ்மையுள்ளவரா? பெருமையுள்ளவரா? என்று தெரிந்து கொள்ள முடியுமாம்.* கிறிஸ்தவர்களுடைய ஒவ்வொரு அசைவுகளும் அவதானிக்கப்படும். தேவனுடைய பிள்ளைகள் நாங்கள் தாழ்மையுள்ளவர்கள் என்பதை உலகம் காண வேண்டும்.

எங்களுடைய தாழ்மையுள்ள வாழ்க்கை மற்றவர்களை தொட வேண்டும். **இயேசு சீஷர்களுக்கு தாழ்மையை கற்றுக் கொடுத்தார். தன்னுடைய சீஷர்களுடைய பாதங்களைக் கழுவினார். ஆண்டவரும் கர்த்தருமாகிய நானே இதைச் செய்தால், நீங்களும் இதைச் செய்யுங்கள் என்று மாதிரியைக் காண்பித்துக் கொடுத்தார். தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறேன் என்று சொன்னார்.** நீங்கள் ஒரு வேளை உலகத்தை வெறுக்க வில்லை, வாசனை வீசவில்லை, தாழ்மையாய் இருக்கவில்லை என்றால் கர்த்தரைப் பார்த்து உம்முடைய ஆவியை எனக்குத் தாரும், எனக்கு விடுதலை தாரும் என்று கேளுங்கள். சிலருடைய பார்வையிலே, பேச்சிலே, செய்கையிலே, சிரிப்பிலே பெருமை இருக்கும். *ஒரு கை துடைக்கின்ற பேப்பரை எறிகின்ற விதத்தில் இருந்து அவர் தாழ்மையுள்ளவரா, பெருமையுள்ளவரா என்பது தெரியும். நாங்கள் யார் என்பது ஒவ்வொரு செயலிலும் தெரியும்.*

**"**

**ஆண்டவரும் கர்த்தருமாகிய நானே இதைச் செய்தால், நீங்களும் இதைச் செய்யுங்கள் என்று மாதிரியைக் காண்பித்துக் கொடுத்தார்.**

ஆவியின் அபிஷேகத்தை பெற்றிருந்தால் தாழ்மையைக் காண்பிப்போம். **என்னுடைய போதகரிடம் இருந்து எத்தனையோ தாழ்மைக்குரிய காரியங்களை கற்றிருக்கிறேன். அபிஷேகம் பெற்றவர்களிடம் இருந்து தாழ்மையை கற்றுக் கொள்ளலாம்.** இயேசு கிறிஸ்து தாழ்மையின் மூலமாக எங்களுக்கு வெற்றியைத் தந்தார். நாங்களும் தாழ்மைப்படுவோம், ஒரு நாள் எங்களுக்கு வெற்றி உண்டு.

## 04. இலவங்கப்பட்டை:





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒருவித பட்டை. இது அழுக்கை போக்கும். **நீங்கள் ஆவியா னவருடைய அபிஷேகத்தைப் பெற்றிருந்தால் வாழ்க்கையில் இருக் கின்ற அழுக்கு எல்லாம் போய்விடும். பாவத்தை குறித்து உணர்த்துகிற ஆவியானவர் அழுக்குடன் இருப்பதற்கு விரும்பமாட்டார். கர்த்தருடைய ஆவியானவரைக் குறித்து; பாவத்தை சுட்டெரிப்பவர் என்று வேதம் சொல்கின்றது.** எத்த னையோ பேர் மீது ஆவியானவர் திடீரென்று இறங்கியவுடனே அவர்கள் பாவ உணர்வடைந்து பாவங்களை அறிக்கை செய்தார் கள். *மிகவும் பிரபலமான ஊழியக்காரன் சார்லஸ் பின்னி என்பவர் வக்கிலாக இருந்து இரட்சிக்கப்பட்ட ஆரம்பத்தில் ஜெபிப்பது, வேதம் வாசிப்பது எல்லாம் ஒளித்து யாரும் காணாமல் செய்து வந்தார். ஒரு நாள் ஆண்டவர் உணர்த்திய போது அவர் ஒரு வனாந்திர பக்கமாய் சென்று மணிக்கணக்காக ஜெபித்து ஆவியானவருடைய அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டதாக உணர்ந்தார். பிற்பாடு அவருடைய வாழ்க்கையை பார்த்தால் அவர் எங்கெல்லம் செல்கின்றாரோ அங்கே இருக்கின்ற மக்கள் பாவ உணர்வடைவார்களாம். பாவத்தை அறிக்கை செய்வார்களாம்.* ஏனென்றால் இவர் மீது இருந்து அபிஷேகம் அவர்கள் மீது பற்றிக் கொண்டது.

**பிரியமானவர்களே, நீண்ட நாட்கள் செய்த பாவம் பாவமாக தெரியாமல் இருக்கின்றதா? நீங்கள் செய்தது தவறு என்று தெரியவில் லையா? ஒன்று செய்யுங்கள், நன்றாக உபவாசம் செய்து ஆவியானவரே, என்னைத் தொடும், நிரப்பும் உணர்வ டைகின்ற இருதயத்தை தாரும ஆண்ட வரே என்று கேட்கின்ற போது நிச்சயமாக தேவ ஆவியானவர் பாவத்தை பாவம் என்று காண்பிப்பார்.** ஆவியானவர் வருகின்ற போது உங்களில் இருக் கின்ற அழுக்குகள் அகன்று போகும். *சில மரச்செடிகளுக்கு அழுக்கணவன் பிடித்தால் அது சிறிது சிறிதாக அந்த செடியை காய்ந்து போகப்பண்ணி அது பட்டுப்போய் விடும்.* இன்றைக்கும் அனேக கிறிஸ் தவர்களுடைய வாழ்க்கையில் அழுக்கணவன் பிடித்துவிட்டது. **ஆண்டவருடைய இரத்தத்தால் கழுவி ஆவியினால் நிரப்பபடுங்கள். நிச்சயமாக அவருடைய இரத்தம் சகல பாவங் களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.**

## 05. ஒலிவ எண்ணெய்:



**இந்த ஒலிவ எண்ணை சந்தோ ஷத்திற்கு அடையாளமாயிருக்கின்றது. தேவ ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற வர்கள் எப்போதும் சந்தோஷ மாயிருப் பார்கள்.** அப்போஸ்தலனாகிய பவுல் அழைக்கப்பட்ட நாள் தொடங்கி சாகுமட்டும் ஊழியம் செய்வாரென்றால் அவர் அபி ஷேகம் பெற்று அதை சந்தோ ஷமாய் ஏற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11கொரிந்தியர் 11:23-27 (23.) அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக் காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப் பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட் டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். 24. யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; 25. மூன்றுதரம் மிலாறு களால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறி யுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். 26. அநேகந் தரம்பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என்சுயஜனங்களால்வந்த மோசங்களிலும, அந்நிய ஜனங்க ளால் வந்த மோசங்களிலும், பட்டணங் களில் உண்டான மோசங்களிலும், வனாந் தரத்தில் உண்டான மோசங் களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; 27. பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்பு களிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரி லும், நிர்வாணத்திலும் இருந்தேன்.** எத்தனை விதமான பாடுகளுக்குள் ளாய் பவுல் சென்றார். ஆனால் சந்தோ ஷமாய் தொடர்கிறேன் என்று சொன்னார்.

*பிலிப்பியருக்கு எழுதும் போது கிறிஸ்து வுக்குள் சந்தோஷமாயிருங்கள் சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் என்றார். பவுலையும் சீலாவையும் சிறைச்சாலையில் கட்டி வைத்திருக்கின்றார்கள். அவர்கள் அழவில்லை, மாறாக தேவனைத் துதித்துப் பாடினார்கள்.* **அபிஷேகம் இருப்பவர்கள் எப்போதும் மனநிறைவோடு கர்த்தர் அனுமதிக்க எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு சந்தோஷமாய் பரம அழைப் பின் பந்தயப் பொருளைப் பெற்றுக் கொள்ளும்படியாய் ஆசையாய் தொடரு வார்கள்.** உங்களுடைய வாழ்க்கை யிலே துன்பமா? கண்ணீரா? வேதனையா? நினைத்த காரியம் நடக்கவில்லையா? தொழில் இன்னும் கிடைக்க வில்லையா? நீங்கள் ஒன்று செய்யுங்கள். ஆண்ட வரே உம்முடைய ஆவியால் நிரப் பும் என்று கேளுங்கள். எல்லாவற் றுக்கும் மேலான ஒரு சந்தோஷம் உங்களை நிரப்பும். கர்த்தருக்குள் சந்தோசமாய் இருப்பதே நமது பெலன் துன்பம் இல்லாத கிறிஸ்தவ வாழ்வுஇல்லை ஆனால் அத் துன்பங்களை மகிழ்ச்சியாய் ஏற்றுமகிழ்ந்திருக்க பழக வேண்டும். அப்போதுதான் கிறிஸ்தவ வாழ்வில் வெற்றி பெற முடியும்

இயேசு பிதாவின் சித்தத்தை இறுதிவரை செய்தார் எந்த துன்பமும் துக்கமும் தேவ சித்தத்தை செய்வதை தடுக்கவில்லை ஏனெனில் ஆண்டவர் இயேசு சென்னார் கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என மேல இருக்குறார (ஏசா61:1,லுக்கா.4:18) கர்த்தருடைய ஆவியானவரால் நிரப்பப்பட்டு தேவசித்தத்தை மகிழ்ச்சியாய் நிறைவேற்றுங்கள்.

"தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக"

**போதகர் V.மகாராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் :-..........................................................

விலாசம் :-..........................................................

..........................................................

..........................................................

..........................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



To:..........................................................

Zion Church Office,

No. 347, Navalar Road,

Jaffna, Srilanka.

TO:

MRS. THARMY,
ZION CHURCH,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org